# உலகத் தமிழர் குரல்

International Movement For Tamil Culture

விலை ரூபா 2-00

ஒலி 8 | ஆடி - 1989 | இதழ் 10

வெளிவந்துவிட்டது!

"மூன்று நாடுகள் அறுபது நாட்கள்"

விலை ரூபா 6-00

நூலாசிரியர்:
திரு. இர. ந வீரப்பன்
(தலைவர் உ. த. ப. இ.)

வெளியீடு:
உ. த. ப. இ. (இலங்கைக் கிளை)

# உலகம் சுற்றும் தமிழ்த் தலைவர்

தமிழ் சமுதாயம், தமிழ் மொழி வாழ, வளர தொண்டு செய்து வருவோர் பலர். ஆயினும் இவர்களில் குறிப்பிடத் தக்க இடத்தை வகிப்போர் சிலரே

உலக நாடுகள் பலவற்றில் பன்னூற்றாண்டு காலமாக குடியேறி வாழ்ந்து வரும் தமிழின மக்களைப் பற்றி அறிவதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும், தொடர்புறவுகளை வளர்ப்பதற்கும் உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்று தமிழ்ப்பணி செய்து அழிபாத பெயரைப் பெற்றவர் பேராசிரியர், பன்மொழிப் புலவர் காலஞ்சென்ற திரு தனிநாயகம் அடிகளார் அவர்கள்.



அவரின் வழியைப் பின்பற்றி தூய்மையான தமிழ்ப் பணியில் ஈடுபட்டுள்ளவர் திரு இர. ந. வீரப்பன் அவர்கள். ஆண்டு தோறும் தமிழின முன்னேற்றத்துக்காக இவர் உலக நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றார் உ. த. ப. இன் தலைவரான திரு. வீரப்பன் அவர்கள் இன்று உலகம் சுற்றும் தமிழ்த் தலைவராகவிளங்கி வருகின்றார்.

— (ஆ ச லி)

## உ.த.ப இன் 5வது மகாநாடு இறியூயன் நாட்டில்

பிரான்சு, மாசி 19

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 5வது உலக மகாநாடு பிரெஞ்சுக் குடியேற்ற நாடான இறியூனியன் (Reunion) தீவில் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது. இந்த மகாநாடு அந்நாட்டில் நடைபெறவிருக்கும் முதலாவது தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழாவாக வரலாற்றில் இடம்பெறுமென்பதில் ஐயமில்லை

உ. த ப இன் தலைவர் திரு இர ந வீரப்பன் அவர்கள் மகாநாட்டு ஏற்பாடுகள் சம்பந்தமாகப் பேசுவதற்கு இவ்வாண்டு ஆடித் திங்கள் பாரிஸ் போகின்றார். அங்கே திரு. வீரப்பன் அவர்கள், இறியூனியன் மகாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவரும் உ. த. ப வின் துணைத் தலைவருமான திரு. வீ தேவ தமாரன் அவர்களுடன் கலந்து பேசவும் புதிதாக அமைக்கப்பட்ட பிரான்சுக் கிளையுடன் விவாதிக்கவும் திட்டமிட்டுள்ளார்

இவர் மேற்கு ஜேர்மனி, சுவிச்சலாந்து, நோர்வே, சுவீடன், ஹொலந்து, டென்மார்க் ஆகிய நாட்டுத் தமிழர்களுடன் கலந்து பேசி ஆங்காங்கு இயக்கம் எப்படி நடைபெறுவதைக் காண்பார். (8ம் பக்கம் பார்க்க

## வெளிநாடுகளில் தமிழர் அமைப்புகள்

தமிழ் மொழி முன்னேற்றம் சமுதாய வளர்ச்சி, உரிமைகள் போன்றவற்றுக்காக பணியாற்றி வரும் சர்வதேச தமிழர் நிறுவனங்கள், தனிப்பட்ட தமிழன்பர்கள் ஆகியோருடன் தொடர்புறவுகளை வளர்த்துக்கொள்ள உ. த ப. இயக்கம் பெரிதும் விருப்பங் கொண்டுள்ளது

ஆகையால் சம்பந்தப்பட்ட அன்பர்களோ அமைப்புக்களோ தத்தம் முகவரி மற்றும் விபரங்கள் ஆகியனவற்றை எமக்கு அனுப்பியுதவும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்

தொடர்பு முகவரி:-

உ. த. ப. இ., 67 ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழர் குரல்

— எ ண் ண ம் —

ஒலி 8 ஆடி 1989 இதழ் - 10

# சமுதாயமும் பண்பாடும்

இன்றைய இளைஞர்கள் நாட்டின் எதிர்காலப் பிரசைகள். வருங்கால சமுதாயத்தின் உறுப்பினர்கள். தேசத்தை ஆளப் போகும் உரிமையாளர்கள். எனவே தேசத்தின் முன்னேற்றம் நமது இளந் தலைமை முறையினர் கைகளிலேயே தங்கியுள்ளது.

இளைஞர்களின் கடமைகள், பங்களிப்புக்கள், பணிகள் மகத்தானவை. சமுதாயம் வாழ்வாங்கு வாழ, நல்ல தேசம் உருவாக இளையோரின் வாழ்வும், தொண்டுகளும் செயற்பாடுகளும் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

இன்றைய இளவல்கள் நாளைய உலகின் பெரியவர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள், நாட்டுக்காகவும் வீட்டுக்காகவும் உழைக்கவேண்டியவர்கள் என்ற நிலையில், இவர்கள் நல்லபடியாக ஒழுங்கான முறையில் வாழ்க்கையை அமைத்து வாழ்ந்தால் தான் சமுதாயம் நன்மையுற முடியும். இளைஞர் சமுதாயம் செய்ய வேண்டிய, பின்பற்ற வேண்டிய விடயங்கள் பலவாகும்.

மனித வாழ்க்கையில், குறிப்பாக இளைஞர் வாழ்வில் கல்வி, பண்பாடு, ஒழுக்கங்கள், தெய்வ நம்பிக்கை ஆதியன மிகவும் இன்றியமையாதவை, அவசியமானவை எனலாம்.

கல்லாதவன், படியாதவன் முழு மனிதனாக முடிவதில்லை. ''கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு'' என்றும் 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' எனவும், 'பிச்சை புகினும் கற்கை நன்றே என்றவாறும் ஒளவைப் பிராட்டியார் நயம்படக் கூறிச் சென்றனர். இளையோர் எவ்வளவுக்கெவ்வளவு கூடுதலாகக் கல்வியை மேற்கொள்ளுதல் அவர் முன்னுக்கு வர, உயர்வு பெற வழி பிறக்கும்.

கல்வியைக் கற்க முடியாத நிலையில், சூழலில் இளைஞர் இருக்கலாம் இவர்கள் முடிந்தளவாவது எழுதப் படிக்கவாவது தெரிந்து அறிந்து கொள்வதுடன், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பயனுள்ள நூல்களை வாசித்து உணர்ந்து அறிவுப் புதையலைப் பெறுதல் சாலச் சிறந்ததாகும்.

கல்வியோடு எவருக்கும் நல்லொழுக்கமும், பண்புகளோடு இயைந்த வாழ்வும் அவசியமாகின்றது.

''ஒழுக்கம் விழுப்பந்தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்றனர் வள்ளுவப் பெருந்தகை. ஒழுக்கம் மேன்மையைத் தருமாகையால் இது உயிரைவிட மேலாகக் கருதப்படுதலும் மதிக்கப்படுதலும் கண்கூடு. நல்லொழுக்கம், பண்பின்றி வாழ்பவன் கீழ்மகனாக, இழியவனாக, மேன்மக்களால், நன்மக்களால் கணிக்கப்படுதல் இயற்கையே;

எந்தவொரு மனிதனும் உயர்ந்த நிலையை அடைய வாழ்வில் சீலங்களும் பண்புடைமைகளும் தேவையாகின்றன. இத்தகைய சீர்மிகு ஒழுக்க சீலங்களை குண நலன்களை நல்லவர்கள். பண்பாளர்கள், அறிஞர்கள், ஞானிகள் போன்றவர்களிடமிருந்தோ அன்றேல் அவர்களின் வாழ்வியலைப் பின்பற்றியோ வாழ்வதால் வாழ்க்கை நலம் பயந்து சிறப்பைக் கொடுக்கும். நல்ல நூல்களை, நன்னெறி இலக்கியங்களைப் படித்துணர்ந்து வாழ்வதன் மூலம் நன்மை தரும் வாழ்வினையும், அதன் விழுமியங்களையும் பெற்றுக் கொள்வதன் மூலம் இன்பமாக வாழ முடியும்.

வாழ்க்கையைப் பாழடிக்கும் உதவாத தரங்கெட்ட பொழுதுபோக்கை நோக்காகக் கொண்ட இலக்கியக் குப்பைகளைப் படிப்பதைக் கூடுமானவரை விலக்கி வாழ்தல் வெறுத்தொதுக்குதல் மனித சீவியத்துக்கு பயன்பல சேர்க்கும் நல்ல செயலாகும்.

நமது தெய்வத் திருமறை, பொய்யாமொழி திருக்குறள் நல்வழியைக் காட்டுவதால் இதன் வழி மனிதன் வாழ்வை அமைத்து உய்வடைய முடியும். குறளமுதம் சுவைக்கச் சுவைக்க மானுட சீவியத்தை ஒளிமயமாக்கிட உதவும் கருத்துப் பெட்டகமாகும்.

ஒழுக்கமான மனிதன் நீதி, நியாயம், தர்மம் (அறம்) போன்றவற்றை மதித்து வாழ்ந்தொழுகும் போது அவன் தெய்வ நம்பிக்கையில் வாழ ஏது நிலை உண்டாகின்றது. நமது வாழ்க்கையில் கடவுள் நம்பிக்கை, தெய்வமே பெரிதென்ற உண்மை பரிணமிக்கும் போது நம் வாழ்வு தூய்மையடைகின்றது. இளைஞர் வாழ்வில் தெய்வ நம்பிக்கை இன்றியமையாததொன்றாகும்.

''தெய்வம் நமக்குத் துணை பாப்பா
ஒரு தீங்கும் வரமாட்டாது பாப்பா''

என்றார் அமரகவி பாரதியார்.

வாழ்க்கைக்கு நல்லொழுக்கங்கள் எவ்வாறு பிரதானமோ அவ்வாறே மனித வாழ்க்கைக்குத் தொழில் செய்தல், உழைத்தல் அவசியமாகும். ஒவ்வொரு இளைஞனும் சுயமாகவோ அல்லது கூட்டுறவு முறையிலோ தொழில் செய்து வாழ்தல் பொருத்தமானது, தொழில் செய்யும் போதும், பொருளைத் தேடும் போதும் தர்மத்தை மறக்கக்கூடாது இன்றைய உலகில் மனிதனை மனிதன் சுரண்டி வாழும் சுயநல வாழ்க்கை பரவலாகக் காணப்படுகின்றது. இது தீங்கானதும், தனிமனிதனையும் சமுதாயத்தையும் சீரழிக்கவல்லது என்பது அனுபவ உண்மை.

இளைஞர்கள் வாழ்வில் கற்பனைகள், மன எழுச்சிகள் வேகங்கள் என்பவற்றால் உந்தப்படுவதால் இவர்களைக் கெட்ட பழக்க வழக்கங்கள் எளிதில் தொற்றி விடுகின்றன. இதனால் இளையோர் வாழ்வு இளமைக் காலத்தில் சீரழிய வாய்ப்புக்கள் உண்டாகின்றன. ஆகையால் இளைஞர் வாழ்வில் விலக்கி வாழவேண்டிய பல விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

மது அருந்துதல், புகைப் பிடித்தல், போதைப் பொருள் உபயோகம் ஆகிய தீய பழக்கங்கள் குறிப்பாக மனித வாழ்வை பாழடிக்கும் காரணிகள்.

( 8ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசு வதை

திரு. சி. சி வரதராசா அவர்கள்
துணைச் செயலாளர், யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை

மெய்ஞ்ஞான உணர்ச்சி ஒன்று தான் மனிதனுக்கு இயல்பாக உள்ள மிருகத் தன்மைகளை குறைத்து சமுதாயத்தின் பாரம்பரியப் பண்பாடுகளை காத்து வருகின்றது. இந்த மெய்ஞ்ஞான உணர்ச்சியை வளர்ப்பதற்கு ஜீவகாருண்ய ஒழுக்கம்தான் அடிப்படை என்பதை உத்தமர்கள் உபதேசித்தும் அதற்கிணங்க வாழ்ந்தும் காட்டியும் உள்ளார்கள். அறங்களுள் சிறந்த அறம் கொல்லாமை என்பதை திருவள்ளுவர்

*''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று''*

என்ற அருமையான குறளின் மனிதனுக்கு மிகஉயர்ந்த அறம் எதுவென்றால் கொல்லாமை அதற்கு அடுத்தபடி உயர்ந்த அறம் பொய் சொல்லாமை எனக் கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்கள் பல கொல்லா விரதத்தை வலியுறுத்தியுள்ளன. தமிழ் மக்கள் பாரம்பரியமாக ஜீவகாருண்யத்தை வாழ்வில் உயிர் நாடியாகக் கடைப் டித்து உய்வடைந்துள்ளனர். ஆனால் இன்று காண்பது என்ன? புனிதமான நமது வாழ்வு அழிவுப் பாதையை நோக்கிச் செல்கிறது. இந்து மக்களின் குல தெய்வமாக, கொடியின் சின்னமாக விளங்கிய கோமாதா இன்று வதைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டு யாழ் மாவட்டத்தில் பார்க்கும் இடமெல்லாம் இறைச்சிக்காக விற்பனைக்காக விலைப்பட்டு வருகிறது. இந்துமத சிவ சின்னமான பசுக்களை: பால்நினைந் தூட்டும் தாய்போல பாலைத் தரும் பசுக்களை, இறைவனின் வாகனமாக மதிக்கும் விடைகளை இந்துக்கள் முன்னாலேயே கொலை செய்து சைவ மக்கள் வாழும் பகுதியிலேயே விற்பது வேதனைக்கரிய விடயமாகும். எமது சுகாதாரச் சூழலும், புனிதத் தன்மையும் சீர்கெடுகின்றன. சைவ சீலர்கள் வாழும் பகுதியிலுள்ள கொலைக் கூடங்களையும், விற்பனை நிலையங்களையும் அகற்றுவதற்கு பிரதேச சபைகள், இந்து மன்றங்கள், சைவ பரிபாலன சபைகள் வேண்டிய நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் இந்து மதத்தின் புனிதத்தைப் பேணி வளர்ப்பது நமது கடமையாகும். இக்கடமையை நாம் இறை நம்பிக்கையுடன் செய்வோமெனில் எமது சமுதாயத்தில் சாந்தமும், அமைதியும், ஜீவகாருண்யமும், அறமும் ஏற்படும் வருங்கால இளைஞர்கள் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் எங்கள் மதத்தின் கோட்பாட்டை, பண்பாட்டை, சாந்த வழியை பேணிக் காப்பதற்கும் உதவி புரியும்.

ஒரு குழந்தை பிறந்ததும் முதலில் அம்மா என அழைக்கும் அதைப்போல் பசு கன்று ஈன்றதும் முதலில் அம்மா அம்மா என அழைக்கின்றது. தாயும் பத்து மாதங்கள் சுமந்து சேயைப் பிரசவிக்கிறாள். பசுவும் பத்து மாதங்கள் சுமந்து கன்று ஈனுகின்றது. இதிலிருந்து பசுவிற்கும் மனித இனத்திற்கும் தொடர்புண்டு. மனித வர்க்கத்தின் முதன்மைப் பிறவி பசுக்களாகும் இதனாலேயே,

*''பாலைப் பொழிந்து தரும் - பாப்பா இந்தப்*
*பசு மிக நல்லதடி பாப்பா''*

எனப் பாரதியார் பாடியுள்ளார். எங்கள் சகோதரம் போன்ற பிறவியை அழிப்பதை அறவும் உணவுக்காக வெட்டிச் சிதைப்பதை மாபெரும் துரோகமாக உணர வேண்டும்.

ஆகவே வேதனையையும், பாவத்தையும் தரும் இந்தக் கொடுஞ் செயல்களை இந்துக்களாகிய நாம் தடுக்காவிட்டால் நாமும் பாவியாவோம் என உணர்ந்து ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமென அன்புடன் வேண்டுகின்றேன்.

*''கொல்லான் புலாலை மறுத்தானைக்*
*கைகூப்பி எல்லா உயிரும் தொழும்''*

- தமிழ் மறை -

---

## இறியூனியன் இந்துக் கோவில்கள்

*எங்கள் நாட்டில் இந்துக் கோவில்களுக்கு மட்டும் ஒன்றும் குறைவில்லை. தமிழர் வாழும் பகுதிகள் எல்லாம் சிவன், முருகன், காளி கோவில்கள் என நிறைய உண்டு. பிரெஞ்சு மொழியில் தான் மிக அண்மைக் காலம் வரை பூசைகள் நடைபெற்று வந்தன. தற்போது மொறிசியசில் இருந்து பூசகர்களைத் தருவித்துத் தமிழ் மூலம் பூசைகள் நடைபெற்று வருகின்றன.*

திரு வி. தேவகுமார்
இறியூனியன்.

---

## தமிழகமும் பர்மாத் தமிழரும்

தமிழ் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு வரும் தலைவர்கள், எழுத்தாளர்கள், அவர்கள் சுற்றுலா செய்யும் நாடுகளிலுள்ள தமிழர்களை, தமிழர் தலைவர்களை, தொண்டர்களை, விருப்பு வெறுப்பின்றிப் பொதுவாகச் சந்தித்து அவர்களுடன் கலந்து பேசி, உண்மையான சாதனைகளை, தக்க ஆதாரங்களுடன் சேகரித்து காலத்தால் அழிந்து போகாதபடி, காலக் குறிப்பேடுகளில் பொன் எழுத்துக்களால் பொறித்து வைக்க வேண்டியவர்கள் தமிழகத்திலுள்ள தலைவர்கள் எழுத்தாளர்களின் கடமையாக இருந்தும் பல்வேறு நாடுகளில் குடியேறி வாழ்ந்து வரும் தமிழர்களைப் பற்றிக் குறிப்பாக பர்மாத் தமிழர்களைத், தலைவர்களைத், தொண்டர்களைத் தமிழ் நாட்டுத் தலைவர்களும், எழுத்தாளர்களும் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை.

இப்படி நான் குறிப்பிட்டுக் கூறுவதற்குக் காரணம், பர்மாத் தமிழர்கள் தமிழ் நாட்டுத் தலைவர்களான பெரியார், அண்ணா போன்றவர்களை வழிகாட்டிகளாக மதித்து, மலர்களை வெளியிட்டு, அவர்களின் பிறந்தநாள் விழாக்களைக் கொண்டாடியும் தமிழ் நாட்டிலுள்ள பல தரப்பட்ட கட்சித் தலைவர்களை, கலைஞர்களை, எழுத்தாளர்களை பர்மா நாட்டுக்கு அழைத்துச் சிறப்பித்துமிருக்கின்றோம் என்பதால் வேதனையோடு சொல்லவும் எழுதவும் வேண்டியுள்ளது.

(தமிழ்த் திரு. வீ. வெள்ளைச்சாமி
செயலாளர், டி. எஸ். மணி மன்றம்
பர்மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொதுமைக்கு இறைமை நெறிகள் . . .

ஆயிரங் கோடி ஆண்டுகளுக்கு முன் ஞாயிறு தோன்றி, அதன் பிறகு ஐநூறு கோடி ஆண்டுக்குப் பின்பே ஞாலம் உண்டாகியது. இந்தப் பூமி உருவாகி இன்று பல கோடி ஆண்டாகி, மனிதர் தோன்றி நூறு லட்சம் வருடமாகியது ஓர் ஒன்பது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் பேசத் தெரியாதபோது ஞாயிறான சூரியனையே வணங்கினான்.

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்ற இறை வணக்கம் தோன்றிய போதே மனிதர்கள் கடவுளை நம்பினர். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற சிவநெறி நம்பிக்கை உலக முழுதும் குமரிக் கண்டம் வழியாக பூமத்திய ரேகை நாடுகளில் முதலில் பரவியது. அப்பகுதியில் 'சைவமே சிவம்! சிவனே செஞ்ஞாயிறு' என்ற வழிபாடும் தோன்றிப் புரந்தது 'வாழ்க தமிழ் சைவம் வாழ்க!' என இருபதாயிரம் ஆண்டாக உலகெங்கும் 'ஓம்' என்று அன்பையும் பண்பையும் தமிழர் பரப்பினர். மூச்சடக்கி முந்நூறு காதம் போனவர் ஓகியர்.

ஐம்பதாயிரம் ஆண்டுக்கு முன்பே, முன்னாள் தோன்றிய முதல் தாய்மொழியும், முதல் மாந்தனும் மனித நாகரிகத்துடன் அறத்தோடு நெறி முறைகளைப் பரப்பியது 'தமிழ் உலகம்' காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பது தமிழிறைமையின் உயிர்ப்பு நாடி.

பனியூழிக்காலம் உலகை மூடிப் பல்லாயிரமாண்டு கழித்து ஊழிப் பெருவெள்ளம் ஏற்பட்டு நிலங்கள் வெடித்துப் பிரளயம் ஏற்பட்டும் உயிரிகள் அழிந்தும் அழியாத தப்பித்த மக்களினம் இறைமையை இழந்து விடாமல் கடவுளைப் புரந்தது.

ஐம்பொருளும் அழியாத உலகம், ஐம்பொறியில் மனிதனை ஆக்கிப் படைத்ததும், ஆண்டவன் நம்பிக்கை ஊழி காலமாக இறைமையுடன் வளர்ந்தது. மாந்தர் தோன்றிய உலகப்பகுதியெலாம் பரவி வேரூன்றியது தான் அறிவியல் வரலாறு. இறைமையின் இவ்வரலாறு தமிழகத்திலும், ஈழத்திலும், வடபுலப் பாரதத்திலும், சிந்துவிலும், நடுநிலைப் பகுதிகளின் மத்திய ஆசிய ஆபிரிக்கா அமெரிக்காவிலும் விரிந்து பரவியது பல நாட்டில் மாந்தர்கள் பரவினர். சமயம் இமயம்போல், இமயத்திற்கு எண் திசையிலும் பரவியது ஐயிரண்டு திசை முகத்தும் தண்புகழைப் பரப்பியது.

ஐயாயிரமாண்டாக சைவச் சின்னங்களும், அடையாளங்களும், ஞாயிறு – ஞாலம் – ஞானம் என்ற முப்பொருளில் மெய்ப் பொருளாகியது. சிவனிய செம்பொருள் மெய்யறிவாற்றலாகி முப்பொருள் உண்மைகளாகியது, சைவம்சித்தாந்தம் ஆகிப் பேருண்மைகளை மனித நெறியாக்கியது. குமரியில் தோன்றி, சேது முழுதும் பாவி. வடக்கே சிந்துவரை சென்று மொழியையும் மனிதனோடு காப்பாற்றிய அழிபடலக் காட்சிகளை சிந்துவெளி அரப்பா நாகரிக முதிர்ச்சிகள் காட்டுகின்றன.

துருக்கிரில் கப்பல் கவிழ்ந்த கதை. தலைமேல் கைவைத்துக் கவலுற்ற காதை, கொம்பு முளைத்தப் பேரரசன் அழிந்த படலம் எல்லாம் வேதங்களையும், தொன்மச் செய்திகளையும் மனித நாகரிக வரலாறாகக் கூறுகிறது மாக்கடல் மர்மங்களும், சிந்துப் புதைகுழிகளும் ஆதி மனித ஆன்மீகக் கலாச்சாரத்தையும், சிற்பக் கலையின் உன்னத உறைவிடங்களையும் மெய்ப்பிக்கின்றன.

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்ற மூலமொழியுடன் கடவுளையும், கல்விக் கண்ணையும் திறந்த அன்றைய ஆன்றோரும் சான்றோரும் தமிழுடன் சமயத்தை வளர்ந்த வரலாற்றை தொல்காப்பியமும், அகத்தியமும், குறளும், சிலப்பதிகாரமும், திருமந்திரமும் பறைசாற்றுகின்றன இயலிசை நாடகம் பதஞ்சலி - சிவனார் திருக்கூத்து

1800 ஆண்டாக வளர்ந்த சிற்பக் கோயில்களும், கல்வெட்டும், கலைகளும், இசையும் செறிவாக ஆசிய பசுபிக் பகுதிகளில் தலை நிமிர்ந்த காட்சிகளாக இன்றும் ளன. பாரதமும், ஈழமும் இந்தோனிசிய வும், தாய்லாந்தும் மலேசியாவும், சிங்கையும், ப்பொடியாவும் ஆன்மீகச் சிறப்பை உணர்த்துகின்றன.

அன்றும் இன்றும் உலகப் பொதுமையை வளர்த்த இப்பண்பாடுகள் தமிழ்ப் பண்பாடுகளே. உலக மாந்தர் ஓரியம் பெறவும், மனித நேயம் உலகவமைதிக்கு வழிகாட்டவும் நமது இறைமைப் பண்புகள் முதிர்ச்சி உள்ளவை. தமிழ்மொழியின் வேரும் தூரும் பரவிய பாங்கு அதன் பண்பாட்டில் அடங்கி உள்ளன அறநெறி வளர்த்த தமிழ் எங்கள் இறைமைக் கொள்கை! வாழ்க தமிழ் சைவம் வாழ்க!

இர. ந. வீரப்பன்
தலைவர்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு
இயக்கம், மலேசியா.

ஆசிய பசிபிக் இந்துமரநாடு
சிங்கப்பூர்
1-4-1988

## உலக நாடுகளில் பல்துறை சார்ந்த தமிழறிஞர்கள் விபரங்கள் தேவை

உலக நாடுகள் பலவற்றில் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு ஆய்வுகள், சாதனைகள், புதிய கண்டுபிடிப்புகள் போன்ற விடயங்களில் முன்னணியில் திகழ்ந்து வரும் தமிழ் அறிஞர்களின் சகல விபரங்கள் யாவும் தமிழச் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கான செயல் திட்டங்களுக்கு தேவைப்படுகின்றன.

ஆகையால் இந்த அறிஞர் பெருமக்களின் முகவரிகள், மற்றும் விபரங்களை எமக்கு அனுப்பியுதவும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். இவர்களின் ஆக்கங்கள் தமிழ்ச் சமுதாய முன்னேற்ற வாழ்வுக்காக பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

ACTION COMMITTEE
INTERNATIONAL MOVEMENT FOR
TAMIL CULTURE
67, STATION ROAD,
JAFFNA,
SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் தமிழர் குரல் இலவசம்

உலகத் தமிழர் குரல் ஏட்டினை தவறுமல் பெற விரும்பும் வெளிநாடுகளில் வாழும் தமிழன் பர்கள், தமிழர் அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் அஞ்சல் செலவினை அனுப்பி வைத்தால் ஏடும், மலர்களும் இலவசமாக அனுப்பி வைக்கவுள் ளோம் என்பதை மிகிழ்ச்சியுடன் அறியத் தருகின் ருேம்.

— ஆசிரியர்

### அஞ்சல் செலவு விபரம்

| | |
|---|---|
| ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா | 5 யு எஸ். டொலர் |
| ஆசிய நாடுகள் | |
| அவுஸ்திரேலியா, நியுசிலந்து | 5 யு எஸ் டொலர் |
| இந்தியா | — ரூபா 25.00 |
| இலங்கை | — ரூபா 15.00 |

சர்வதேசக் காசுக்கட்டளை (INTERNATIONAL MONEY ORDER) காசோலைகள், டிராப்புகள் (DRAFT'S) போன்றவை அனுப்ப வேண்டிய முகவரி:-

MR. R. THAVAGOPAL
URUMPIRAI SOUTH
URUMPIRAI
SRI LANKA

## நாம் போற்றினேம்

எடுப்பு

தாயே நாம் போற்றினேம் - செந்தமிழ்த்
தாயே நாம் போற்றிடுவோம்

தொடுப்பு

பூம்பொழில் தன்னில் போற்றிடும் புகழுரை
பூத்தமொழி எனைத்திலும் மேன்படும் என்னருந்
(தாயே)

முடிப்பு

காலமும் கடந்துமே சாலவுங் கன்னியாய்
ஞாலமும் அளந்தனை ஞானிகள் பெற்றனை
நீர்நில வளத்திலும் நிகரில என்றனை
நீரமையில் உன்தனை நிறைசெய் யாருளர்
(தாயே)

புலவர் நா சிவபாதசுந்தரனர்

# தி.மு.க. வின் தேர்தல் வெற்றி
## உ.த.ப. வின் இலங்கைக்கிளை வாழ்த்து

வரலாற்றுச் சாதனை படைத்திட்ட உங்களினதும், தி.மு.க. வினதும் மாபெரும் வெற்றியைக் கண்டு தமிழுலகம் ஆறுதலடைகின்றது. அரசியல் பேரழிவிலிருந்து தமிழகம் காப்பாற்றப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளமை நிம்மதியைத் தருகின்றது.

உங்கள் தலைமையின் கீழ் தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு சகல துறைகளிலும் வளம்பெற்றுயர்வதுடன், விசேடமாகத் தொழில் வளர்ச்சியிலும், அறிவியல் முன்னேற்றத்திலும் மேன்மைபெறவும், தமிழ்மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரம், பாதுகாக்கப்படவும் வறிய மக்களின் வாழ்க்கை ஒளிமயமாகவும் வேண்டுமென விரும்புகின்ருேம்.

இன்றுளில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலால், துன்ப நிலையில் வீழ்ந்து துவழும் ஈழத்தமிழ் மக்கள், உரிமையுடன் மீளவும் நல்வாழ்வு பெற்றுய்ய அவர்களின் உரிமைக்குக் குரல் கொடுப்பதோடு, உலகத் தமிழர் தொடர்புறவுகள் பல வழிகளிலும் முன்னேற்றம் பெற உறவுக்குக் கைகொடுத்துதவுவீர்கள் என நம்புகின்ருேம்.

பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கும் திராவிட இயக்கங்கள் வேற்றுமை மறந்து, உண்மையுணர்ந்து, ஒன்றுபட்டு உயர்வடைய உங்கள் அரும்பணி ஓங்குவதாக.

உலகத் தமிழரின் ஒப்பற்ற தலைவன் என்ற முறையில், உங்கள் தலைமையின் கீழ் தமிழக மக்களும் உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் வளம் பல பெற்று வாழ்வாங்கு வாழவேண்டி உங்களுக்கும், உடன்பிறப்புகளுக்கும், தமிழக மக்களுக்கும் உ.த.ப. இன் இலங்கைக் கிளையின் சார்பில் பாசமிகு வாழ்த்து மலர்களைக் குவிக்கின்ருேம்.

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் மலேசியக் கிளையின் வயது பதினைந்து

1974ல் ஈழத்தில் அமைந்த உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் மலேசியாவில் அதே ஆண்டாக சிறு கிளையாக இயங்கிய இது 15 ஆண்டில் நாடுமுழுவதும் விரிவாகப் பரவி, இலங்கைக்கு அடுத்த பெரிய கிளையாக வேரூன்றிவிட்டது. நாடு எங்கிருந்தும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர் சேர்ந்துவிட்டனர்.

இதன் ஆயுள் உறுப்பினர்களாக உள்ளவர்கள் இர. ந. வீரப்பன், ப. கு. சண்முகம், ரெ அரிகிருஷ்ணன். இராம. கன. சுப்பிரமணியன், மா. இராமச்சந்திரன், இ அருணசலம், திருமதி மகேசுவரி, வீ. அருளன் ஆக எட்டுப் பேர்.

கிளையின் செயற்குழு: தலைவர், மாசி. அண்ணுமலை, துணைத் தலைவர் பெ. மு. இளம்வழுதி செயலர்; இர. ந வீரப்பன், திருமதி ந. மகேசுவரி. பொருளர், ப. கு சண்முகம், குழுவினர்கள், வே. இராசு. கோ. நடேசன், மு வேலாயுதம், வே கார்த்திகேயன், நா. சு. மணியம்

1987ல் இதன் பொறுப்பில், நாலாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு நடந்ததும், 1989ல் 5-3-89ல் குளுவாங்கில் (தெற்கே 200மைல்) தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கமும் நடந்ததும் மிகவும் குறிப்பிடத்தக்கது. அனைத்துலகத் தலைவர் தம் பொறுப்பில் மலேசியாவில் மிக வலுவாக கிளை இயங்கி வருவது மூலம் உலகு எங்கும் அடித்தளமாகப் பரவி வருகிறது எமது இயக்கம்.

செய்தி — மலேக்கிழார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ. த. ப. இயக்கமும் பர்மாத் தமிழரும்

திரு வீ. வெள்ளைச்சாமி
பர்மா

நான்கு இன மக்கள் வாழும் மலேசிய நாட்டிலுள்ள, தமிழர்களும், தலைவர்களும், எழுத்தாளர்களும், தினவார திங்கள் இதழை நடத்தி வருகின்றவர்களும் உலகத் தமிழர்களின் தமிழ்த் தொண்டுகளை இன உணர்வோடு பெருமைப்படுத்தி செய்திகளை வெளியிட்டும் இலக்கிய வரலாற்று நூல்களைப் படைத்தும் தமிழினத்தின் தொன்மையான பண்பாட்டை உலகறிய உணர்த்தி வரும் புரட்சிகரமான செயல்கள் அனைத்துலக தமிழர்களும் பெருமைப் படத் தக்கதாகும்.

உலகத் தமிழர்களின் எழுச்சிக்கும் ஒற்றுமைக்கும் பாடுபட்டு வரும் உ.த ப. இயக்கம் தலைமையக தலைவராக பொறுப்பேற்றிருக்கும் திரு இர. நா. வீரப்பன் அவர்களை 1984ல் பர்மா உ.த.ப. இயக்கக் கிளையினர் அழைத்து பர்மாத் தமிழர்களும், தலைவர்களும் அவருக்கென ஏற்பாடு செய்திருந்த வரவேற்புச் சிறப்புக் கூட்ட நிகழ்ச்சிகளெல்லாம் மகிழ்வோடு கலந்து அனைவரிடத்திலும் அன்போடு கலந்துரையாடி மலேசியா சென்று அங்கு வெளியாகும் தமிழ்த் தினசரிகளில் பர்மாத் தமிழர்களைப் பற்றிய செய்திகளை விரிவாக வெளியிட்டிருந்ததை பர்மாத் தமிழர்கள் படித்து மகிழ்ந்தனர்.

உலகில் தமிழர்கள் வாழும் நாடுகளுக்குச் சென்று, அந்நாடுகளுக்கு தமிழர்கள் குடியேறி வாழ்ந்த கதைகளை வீழ்ந்துவிட்ட விபரங்களை, இன்று வாழ்ந்து வரும் நிலைகளை எல்லாம் பத்தாண்டுகளுக்கு மேலாக அரும்பாடுபட்டுச் சேகரித்துள்ளார்.

பர்மாத் தமிழர்களுக்குள் பூசல்கள் இல்லாத சாதியற்ற சமநிலைச் சமுதாயம் அமைந்திட வேண்டுமென ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக உண்மை, துணிவு, சுயமரியாதை, மனிதாபிமானம் இவைகளை உள்ளடக்கி உழைத்து வரும் ஐயா டி. எஸ் மணி அவர்களின் தொண்டுகளையும் அவர் வளர்த்துவிட்டவர்களால் எதிர்க்கப்பட்டதையும் நேரில் கண்டறிந்து உலகத் தமிழர் தலைவர்கள் வரிசையில் ஐயா மணி அவர்களையும் சேர்த்து, மற்றும் பர்மாத் தமிழர்களுக்சாகத் தொண்டாற்றி வரும் இயக்கத் தலைவர்கள், அறங்காவலர்கள், எழுத்தாளர்கள் கலைஞர்கள் அனைவரையும் எவ்விதமான பாகுபாடின்றி நடுநிலையோடு, வீரப்பன் அவர்களின் வீரமிகு உழைப்பால் உருவாக்கப்பட்டுள்ள உலகத் தமிழர் வரலாற்று நூலில் பர்மாத் தமி ,ர்கள் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளதை பலர் படித்து மகிழ்ந்துள்ளனர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவரின் தொலை நோக்குச் செயலை எண்ணி பூரிப்படைந்து இந்நூல் தமிழர்களின் இல்லம் தோறும் வாங்கிப் படிக்க வேண்டிய கலைக் களஞ்சியமெனவும் பெருமைப்படுகின்றனர். தமிழ் கூறும் மக்கள் என்றும் மறக்கமுடியாத துணிகரமான செயலைச் செய்து முடித்த உ த ப. இன் தலைவர் அவர்கள் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## கோலாம்பூரிலும், சேலத்திலும் தலைமையகச் சேமிப்புப் பணநிதி

*1985 டிசம்பரில் சேலத்தில் உலகத் த்மிழ்ப் பண்பாட்டு இயக்கப் பெயரில் சேமிப்பு பேங் (வங்கி) பண முதலீடும், இதுபோல் 1987ல் கோலாலம்பூரில் 4வது மாநாட்டுக் கணக்கு நிதியும் சேமிப்பு மூலமாகத் தலைமையகத்திற்குச் சொத்து உண்டு.*

*தலைமையக சார்பில், அதன் அமைப்பாளர் சங்கொலி - இருசனும், சேலத்தில் பொறுப்பு வகிக்கிறார். இதுபோல் மலேசியாவில் அ. கணேசலிங்கம் - இர. ந. வீரப்பன் இருவர் பொறுப்பிலும் கணக்குப் பொறுப்புக்களை ஏற்றுள்ளனர். இதுபோல் பாண்டிச் சேரியிலும் அமையவிருக்கிறது. தலைவர் செல்லும் நாடுகளில் எல்லாம் இதனைச் செய்யும்படி கிளைக்குழுவை வலியுறுத்துகிறார்.*

### பர்மா நாட்டில் மூதறிஞர்
## திரு டி. எஸ். மணி அவர்களின்
# பிறந்தநாள் பெருவிழா

பர்மா மாசி 1

பர்மா நாட்டில் வாழும் 2 இலட்சம் தமிழர்களின் பெருந் தலைவராக வாழ்ந்து தமிழர் சமுதாய முன்னேற்றப் பணி செய்து வரும், மூதறிஞர் திரு டி எஸ் மணி அவர்களின் 71ஆம் ஆண்டு நிறைவு நாள் விழா 5-: 89 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நிம்பலே நகர் அருள்மிகு மாரியம்மன் கோவில் மண்டபத்தில். சிவநேயச் செல்வர் வி எஸ். சாமிநாதன், தலைமை நிர்வாகி, நடராசப் பெருமான் ஆலயம் காலபஸ்தி அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

பொன் மனச்செம்மல், வி. கே. ஆர். வேலு, தலைவர் அருள்மிகு நடராசப் பெருமான் ஆலயப் பொது நலக் குழு காலஸ்பதி, இசைக்கலைஞர், ஏ சந்திரசேகர், (ரெ.மாரிமுத்து தட்டோன்) நிர்வாகி, அருள்மிகு பாலசுப்பிரமணிய ஆலயம், மூப்பலின் ஆகியோர் முன்னிலையில் விழா நிகழ்ச்சிகள் நடந்தேறின.

விழாவில் நா. கோ. சதாசிவம், பீலிக்கான் எம் மணிமாறன், எஸ் பி. சேதுபதி, க இராசேந்திரன், காலபஸ்தி, உ. மாணிக்கம், கி பாண்டியன், சி. இராசேந்திரன், ச. முத்தையா, க. ரவி போன்றோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்தப் பிறந்தநாள் விழாவினை மூன்மாவிலம், மூப்பலின் நிம்பலே நகர் டி. எஸ். மணி தொண்டர் குழுவினர் தமிழ்த்திரு. டி. எஸ் மணி அவர்களின் பிறந்த நாள் விழா விமரிசையாக நடைபெற முன்னின்று உழைத்தனர். டி. எஸ் மணி மன்றத்தின் தலைவர் திரு. கா. கலைமுத்து, செயலாளர் எம். மணிமாறன், பொருளாளர் திரு. ஆ. கருணாகரன் ஆகியோராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி. மு. க. வின் தேர்தல் வெற்றி:
## உ. த. ப. தலைமையகம் வாழ்த்து

தமிழகத் தேர்தலில் தி. மு. க. வென்று ஆட்சியை அமைத்ததற்கு உ. த. ப. வின் தலைமையகம் பாராட்டிச் செய்தி அனுப்பியுள்ளது

22-1-89ல் நமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைமையகம் வெளியிட்ட தமிழகத் தேர்தல் பாராட்டறிக்கையில் தி. மு. க. பெற்ற பெரும் வெற்றிக்காக, தமிழ் நாட்டு மக்களைப் புகழ்ந்தும், அதனை வாழ்த்தியும் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

## உலகத் தமிழர் திருநாளை தை முதல் நாளில் கொண்டாட உ த ப இயக்கம் வேண்டுகோள்

மலேசியா, மாசி - 2

உ. த. ப. இயக்கம் 1989 தை முதல் நாளில் முப்பது நாடுகளுக்கு தைப் பொங்கல் வாழ்த்துச் செய்தியை தலைமையகம் மலேசியாவிலிருந்து நூறு பெயருக்கு மேல் உலகம் எங்கும் இவ்வாறு அனுப்பியது. இவ்வாறான ஒரு அனைத்துலகச் செயலை வேறு எந்த நாட்டிலுமோ எந்த ஒரு கட்சியோ என்றுமே செய்ததில்லை இந்த மிகமிகக் குறிப்பிடத்தக்க நமது பாராட்டுகளை மலேசியாவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அச் செய்தியில் திருவள்ளுவராண்டு 5020ம் பிறப்பு என்றும், அதுவே தமிழ்ப் புத்தாண்டு என்றும் அந்த வாழ்த்துச் செய்தி உலகத் தமிழரை விழித்தெழச் செய்தது

### உ. த. ப. வின் 5வது மகாநாடு

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டுக்கு இலங்கை, இந்தியா, மலேசியா உட்பட பல நாடுகளிலிருந்து பேராளர்கள் செல்ல உள்ளனர் தமிழகத்திலிருந்து பயணம் மேற்கொள்ளும் குழுவுடன் கலைக் குழுவொன்றும் சென்று அங்கே தமிழ்ப் பண்பாட்டுக் கலை கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகளை நடத்துமென நம்பப்படுகின்றது.

இந்தத் தீவில் இரண்டு லட்சம் தமிழினத்தவர் பிரெஞ்சு மொழி பேசி இந்துக்களாக வாழ்கின்றனரென்பதை விசேடமாகக் குறிப்பிடலாம்

## I.M.F.TC. and Membership

The International Movement For Tamil Culture is being a non-political cultural organisation with over forty branches all over the world. The head quarter of the movement functions at Kelang, Malaysia.

Any Tamil can join this organisation with an entrance fee of Rupees ten (10/) in Sri Lanka Fee for life membership is Rs 250 - (Inland) and Ten U. S. Dollars ( 1)) for membership abroad.

For more detail you had better write to the following address please.

Mr. R. Thavagopal, Urumpirai South.
Urumpirai, Sri Lanka.

## விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு

யாழ்ப்பாணப் பண்டைய அரசர்களான குகன் வம்சத்தார் தொடர்பான ஆராய்ச்சி நூல்,

எழுதியவர் :-

திரு ம. சு. சிவப்பிரகாசம் அவர்கள்
(ஆட்சிக் குழு உறுப்பினர் உ. த. ப, இ. இலங்கைக் கிளை)

பல கல்விமான்களின் மதிப்புரை, அணிந்துரைகளுடன் வெளிவந்துள்ளது. நூலின் விலை ரூபா 27-50

வெளியீடு அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம், தொல்புரம், சுளிபுரம், இலங்கை.

ஆசிரியர்: ஆ சண்முகலிங்கம்

வெளியீடு உ. த ப இயக்கம் இலங்கைக் கிளை)

அச்சுப் பதிவு சுடரொளி அச்சகம், யாழ்ப்பாணம்

வெளிவந்து விட்டது!

தமிழில் ஒரு வாரப் பத்திரிகை **திசை** ‘சற்றடே றிவியூ’வின் சகோதர இதழ்

உலக, உள்ளூர் செய்திகள், அரசியல், சமூகம், அறிவியல், கல்வி. கலாசாரம், இலக்கியம் இன்னும் பல சுவையான அம்சங்கள் கொண்டது.

பிரதிக்கு முந்துங்கள்! விலை ரூபா 3-50

விபரங்களுக்கு: NEW ERA PUBLICATIONS LTD. 118, 4th Cross Street
P. O. Box 122, Jaffna Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சு மனிதவுரிமைக் கழக உறுப்பினராக வீ.தேவகுமார் நியமனம்

பாரிசு மார்ச்–10

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் துணைத் தலைவர்களில் ஒருவரான பாரிஸ் வீ. தேவகுமார் என்னும் தமிழர் ஒருவர் இதற்குத் தேரந்தெடுக்கப்பட்டிருக்கிறா.

தமிழ் பிரெஞ்சு எழுத்தாளரும், பிரபல கவிஞருமான ரியூனியனில் பிறந்த இவர், பிரான்சுக் கிளையின் உ. த. ப. கத் தலைவராவர்.

மகாகவி பாரதியின் பல பாடல்களைப் பிரெஞ்சுப் பாடல்களாக்கி நூலாக வெளியிட்டதுடன் 1986ல் அவற்றை இரு மொழியிலும் பாரிஸ் ஒலிபரப்பின் மூலம் நாடு முழுதும் பரப்பியவர் இவர்.

புதிய மனித உரிமைகள் கழகத்தின் தலைவராக, பிரஞ்சு நாடாளுமன்ற உறுப்பினரின் தலைமையில் இவருடன் அறுவர் உறுப்பினர்கள். இவர்களில் இருவர் புகழ் பெற்ற பெண்கள் எழுவரும் பல துறையில் பிரெஞ்சு உலகில் பிரபலம் பெற்றவர்கள் இந்த மாதம் இத்தேர்வு அதிசயிக்கத்தக்க விதத்தில் நடந்தது.

பிரெஞ்சும், பிரஞ்சைச் சேர்ந்த பல நாடுகளிலும் மனித உரிமைகள் மீறப்படுகிறதென இவர்களது குழு ஆராயவிருப்பதாக திரு. வீ. தேவகுமார் சொன்னார். அரச அங்கீகாரம் பெற்றது இம்மன்றம்.

ரியூனியன் தீவில் தமிழில் பயிலத்தக்க பாடநூல் எழுதியவர் இவர். 1989 டிசம்பரில் 5வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாடு நடைபெறுவதற்கான ஆயத்தக் குழுவை அமைத்துத் தேவகுமார் செயலாற்றி வருகிறார்.

யூனெஸ்கோ வில், பாரிஸ் கிளையின் ஓர் அதிகாரபூர்வமான உறுப்பினரைப் பேராளராய் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் ஐந்தாண்டாகச் செயலாற்றி வருகிறார். பிரெஞ்சுப் பகுதிகளான பல தீவுகள் உள் வெளிநாடுகளில் இவர் வலம் வந்து சுற்றுலாப் பேராசிரியராகவும், ஆய்வாளராகவும் பயணம் போகிறார்.

(செய்தி– மலைக்கிழார்)

கலர், லைன், போட்டோ
புளக்குகளையும்
ரபர்சீல் பிளாஸ்ரிக்போட், கிரெக், லமினேசன்
வேலைகளையும்
உடனுக்குடன் செய்துகொள்ள
ஆர்ட் கிராபிக்ஸ்
538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
வெளிப்புறப்படப்பிடிப்புகளும் ஏற்கப்படும்

## சமுதாயமும் பண்... (2ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியான தீமையான பழக்கங்கள் வளர்ந்து பழக்கக் கேடாக மாறும் போது, தொற்று நோய்கள், தீராத நலிகள், வறுமை, மிடிமை இன்னோரன்னவை மனிதனை ஆட்கொள்கின்றன இவை ஒருவனுடைய உடலையும், உள்ளத்தையும் சீர்கெடுப்பதுடன் மனித வாழ்க்கையின் நோக்கங்களை வேரோடழிக்கின்றன.

மது விற்பனை' சிகரெட்டு வியாபாரம் ஆகியவற்றின் மூலம் அந்நியர்கள் நம் மக்களை வியாபாரமாக்கி, அவர்களின் வாழ்க்கையைச் சுரண்டி நசிப்பதனால் கிடைக்கும் பெருந்தொகையான வருமானத்தைச் சமூகத்தை அழிக்கும் கைங்கரியங்களுக்கு பயன்படுத்துவதை நாம் எண்ணி, உணர்ந்து வாழவேண்டும். தீங்கியலைத் தோற்றுவிக்கும் இத்தகைய கொடுமையான பழக்கங்களால் அடிமைப்பட்டோர் ஆயிரம் ஆயிரம். அல்லல்பட்டோர் பல்லாயிரம் என்பது மறுக்க முடியாத உண்மை

தீயனவற்றைக் கழித்து, விலக்கி வாழும் போது மனிதனுடைய சுயநலத் தன்மைகள் கெடுவதோடு. தன்னலமற்ற வாழ்வு மலர்வதால் சொந்த வாழ்வும், சமுதாயப் பணிகளும் பொலிவு பெறுகின்றன மனித வாழ்வில் இலட்சியங்கள், விருப்பங்கள் வெற்றிபெற வழி பிறக்கின்றது

நமது சமுதாயத்தினர் நல்லொழுக்கத்தை ஒற்றுமையை, பொதுநோக்கை மனங்கொண்டு கடைப்பிடித்து. அவற்றுக்கேற்ப இயைந்து அமைந்து செய்யும் தொண்டுகள் செயல்கள் உயர்ச்சியைக் கொடுத்து சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்யும்.

இன்றைய காலத்தில், அல்லற்பட்டு அமைதியிழந்து வீழ்ந்து தாழ்ந்து கிடக்கும் நம் சமுதாய மக்கள் எதிர் காலத்தில் அமைதியும் நன்மையும் பெற வேண்டுமாயின் அவர்களைக் கைதூக்கி வாழ்வில் ஒளியேற்றி வழிகாட்டி வாழவைக்க வேண்டிய கடமைகள் நம் இளையவர்களின் பொறுப்பிலே தொக்கி நிற்பது பெருண்மையாகும்.

எனவே நம் சமுதாயம் நல்லொழுங்கில் வாழ்க்கையை வழிப்படுத்தி நெறிப்படுத்தி அமைத்துக் கொள்ளும் போது எழுங்கு முறையான காரியங்கள் அடிகோலப்படுதலும் சமூக முன்னேற்றப் பணிகள் முடுக்கிவிடப்படுதலதும் இயல்பாக அமையுமென்பது நிச்சயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org